மனனம் செய்ய இந்த வார வசனம்:

**“ஆண்டவரின் நியமங்கள் சரியானவை; இதயத்தை மகிழ்விக்கின்றன”**

(திருபா:19: 8)

**இன்றைய வாசகங்கள்:**

எண்ணிக்கை: 11: 25-29;

திருப்பாடல்: 19: 8, 10, 12-14;

யாக்கோபு: 5:1-6;

மாற்கு: 9: 38-43, 45, 47, 48

இன்று ஆண்டவர் நம்மிடம் கூறுகிறார்: சுற்றியுள்ளவர்களைப் பற்றித் தீர்ப்பிடுவதை நிறுத்துங்கள். ஆனால், உண்மையில் தேவையானது எதுவோ அதாவது கடவுளின் மீதுமட்டுமே கவனம் செலுத்துங்கள். நம்முடைய இந்த நம்பிக்கையின் பயணத்தில், ஒருவருக்கொருவர் ஊக்கமுட்டுங்கள், மற்றவர்களின் சிறு முயற்சிகளை விரைவாக அல்லது குறைவாகத் தீர்ப்பிடுவதை நிறுத்திக்கொண்டு, ஒருவருக்கொருவர் உயர்த்துங்கள். மழையும் சூரியனும் எவ்வாறு அனைவரின் மீதும் பொழியப்படுகிறதோ, அவ்வாறு கடவுளின் கனிவும் அவர் அன்பு செய்யும் அனைவர் மீதும் பொழியப்படுகிறது என்பதே அந்த உண்மை.

அண்மைய கொவிட்-19 தொற்றுநோய்க் காலத்தில், பாதிக்கப்பட்ட மக்கள் உதவிபெறும்போது, அது கிறிஸ்தவனிடமிருந்தோ அல்லது ஒரு இந்துவிடமிருந்தோ உதவி வருகிறதா என்று கேட்கவில்லை. இந்தியா மற்றும் இத்தாலியில் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டபோது, தன்னலமற்ற சேவையும், அன்பின் வெளிப்பாடும், குறிப்பாக முன்களப்பணியாளர்களின் சேவையும் அளப்பரியதாக இருந்தது. மக்கள் தங்களிடமிருந்த சமையல் எரிவாயு சிலிண்டர்கள், மருந்துபொருட்கள் ஆகியவற்றை தேவைப்படுவோருக்கு தந்து உதவினார்கள். பலர் வீதியில் இருந்தோருக்கு, தனிமையில் வாடியவருக்கு, காணாமல் போனோர் அனைவருக்கும் உணவு வழங்கி உதவினர். இவையெல்லாம்,. உண்மை மற்றும் துயரத்தில் இருக்கும் அண்டை அயலாரோடு இணைந்து, கடவுளின் தன்மையில் இருக்கும் அன்பின் வெளிப்பாடு. அனைத்து தரப்பு மக்களையும் அன்பு செய்யவும், அன்பின் மொழியை மட்டுமே பேசவும் கடவுளிடமிருந்தே இந்த உலகம் இதைக் கற்றுக்கொண்டது.

நம்முடைய அனைத்து நல்ல முயற்சிகளையும் சில சமயங்களில் நாம் கருத்தில் கொண்டாலும், அவை அனைத்திற்கும் வெகுமதி உண்டு என்று இயேசு கூறுகிறார். இது நம் வாழ்வின் வெளிப்படையான உண்மை. நாம் இயேசுவில் நிலைத்திருக்க வேண்டும் மேலும் அவருடைய அன்பின் கட்டளையில் வாழ மற்றவரையும் ஊக்குவிக்க வேண்டும். இந்த உணர்வை நாம் அடையும்போது திருப்பாடல் ஆசிரியர் கூறுவதைப் போல ஆண்டவரே உம்முடைய நியமங்கள் உண்மையில் எனக்கு மகிழ்வைத் தருகின்றன என்று நாமும் பாடுவோம். இதனால், நம்மை இணைக்கும் இயேசுவினால் பலருடனும் பொதுவில் ஒற்றுமையுடன் நிற்கிறோம் என்பதை அறிந்துகொள்வோம்.

உண்மையாகவே அவரே திராட்சைக் கொடி, நாம் அவரின் கிளைகள்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 39/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

26 செப்டம்பர் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக் காலம் 26 ஆம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்: **அனைத்துலகும் ஆண்டவரைப் போற்றுக!**

## “எனக்கு எதிராக இராதவர் என் சார்பாக இருக்கிறார்”

“நமக்கு எதிராக இல்லாத எவரும் நமக்கு ஆதரவானவர். “இயேசுவின் இந்த எளிமையான அதே சமயத்தில் மிகவும் வல்லமை வாய்ந்த நம்பிக்கையான வார்த்தை, அவரில் நம்பிக்கைக் கொண்டு செயல்படும் அனைவருக்கும் நம்பிக்கை அளிக்கின்றது. சில சமயங்களில் நாம் கொண்டுள்ள நம்பிக்கை, வாழ்வில் நடைபெறும் அனைத்து செயல்களுக்கும் நமக்கு முழு உரிமை உள்ளது என்று நாம் பெரிதாக நினைக்கலாம். சீடர்களைப் போன்றோ அல்லது மோசேயிடம் முறையிட வந்த மனிதர்களைப் போன்றோ “ஏன் ‘எங்களைப் போல’ அவர்கள் முழுமையாக நம்பிக்கைக் கொள்ளவில்லை என்று நாமும் கூட நடந்துகொள்வோம்.

